**கவனிக்க.**- *2007.01.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1483 - 2007 පෙබරවාරි 02 වැනි සිකුරාදා - 2007.02.02**

*1483 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 78 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 83 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, பெப்புருவரி 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, சனவரி 26 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2007 இன் இல. 34

டீஆர்எப்/ஆர்ஈசீரீ/580 (iv) ஏவை.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மரணத்தின் பின்னரான பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தரின் மரணத்தின் பின்னரான பதவியுயர்வு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

அ. மேஜர் ஜெனரால் பாரமி சுதம்மிக்க பண்டார குலதுங்க, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, யூஎஸ்ஏ, டப்சீ

(1) 2006, யூன் மாதம் 26 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் லெப்டினன்ட் ஜெனரால் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, யூலை 06 .

2-138/2

---

2007 இன் இல. 35

டீஆர்எப்/ஆர்ஈசீரீ/770 (18).

எம்எஸ்பீ/ஏ/6(ஏ) (மேஜர் ஜெனரால்) (02) உம் 2006 ஒகத்து 08 ஆந் திகதிய கடிதத்துக்கு இணைப்பு "அ" ஆக

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள், பதவிகள் துறத்தல், நியமனங்கள்

### பதவி உயர்வுகள்

1. 2006, சனவரி மாதம் 31 ஆந் திகதியிலிருந்து தற்காலிக மேஜர் ஜெனரால் ஆக:

(அ) பிரிகேடியர் ஜே ஜே பீ எஸ். ரீ. லியனகே, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, ஐஜீ, எல்டிஎம்சீ

2. 2006, மே மாதம் 04 ஆந் திகதியிலிருந்து தற்காலிக மேஜர் ஜெனரால் ஆக:

(அ) பிரிகேடியர் எல்பீ அலுவிஹாரே, யூஎஸ்பீ, பீஎஸ்சீ, ஏஏரிஓ

3. 2006, ஒகத்து மாதம் 03 ஆந் திகதியிலிருந்து தற்காலிக மேஜர் ஜெனரல்களாக.

(அ) பிரிகேடியர் எஸ்ஏஜீ. சூரியஆரச்சி, யூஎஸ்பீ

(ஆ) பிரிகேடியர் டப்ஆர் வசந்த குமார

(இ) பிரிகேடியர் ஆர்கேபீ ரணவீர, யூஎஸ்பீ

(ஈ) பிரிகேடியர் எல்எம் சமரவீர, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ.

### பதவிகள் துறத்தல், நியமனங்கள்

4. 2006, சனவரி மாதம்31 ஆந் திகதியிலிருந்து-

(அ) பிரிகேடியர் ஜேஜேபீஎஸ்ரீ லியனகே ஆர்எஸ்பீ யூஎஸ்பீ, ஐஜீ எல்டீ, எம்சீ - தரைப்படை தலைமையகத்தின் புத்தி பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் பதவியினைத் துறத்தலும் 23 ஆம் சேனைத் தலைமையகத்தின் சேனையணித் தலைவராகவும் நியமித்தல்.

5. 2006, மே மாதம் 04 ஆந் திகதியிலிருந்து -

(அ) பிரிகேடியர் எல்பீ அலுவிஹாரே யூஎஸ்பீ, பீஎஸ்சீ, ஏஏரீஓ - படையணி அமைப்பு ஆணையிடும் தலைமையகத்தின் பணிகளில் ஈடுபட்ட கட்டளைத் தலைவர் பதவியினைத் துறத்தலும் படைபணி அமைப்பு ஆணையிடு தலைமையகத்தின் கட்டளைத் தலைவராக நியமனம் செய்தலும்.

6. 2006, ஒகத்து 03 ஆந் திகதியிலிருந்து-

(அ) பிரிகேடியர் எஸ். ஏ. ஜீ. சூரியஆரச்சி யூஎஸ்பீ - இலங்கை தரைப்படை தலைமையகத்தின் பொறியியல் சேவை பணிப்பாளர் சபையின் பணிப்பாளர் பதவியினைத் துறத்தலும் முன் பேணுதல் பகுதி (கிழக்கு) ஏவுநர் ஆக நியமித்தல்.

(ஆ) பிரிகேடியர் டப் ஆர். வசந்த குமார - முன்பேணுதல் பகுதி (வடக்கு) பணிகளில் ஈடுபட்ட ஏவுநர் பதவியினைத் துறத்தலும் முன் பேணுதல் பகுதி (வடக்கு) கட்டளைத் தலைவராக நியமனம் செய்தலும்.

(இ) பிரிகேடியர் ஆர் கே பீ ரணவீர, யூஎஸ்பீ - இலங்கைத் தரைப்படை தலைமையகத்தின் நிதி முகாமைப்படுத்தல் கிளையின் பணியில் ஈடுபட்ட பணிப்பாளர் ஜெனரால் பதவியினைத் துறத்தலும் இலங்கை தரைப்படைத் தலைமையகத்தின் நிதி முகாமைத்துவ கிளையின் பணிப்பாளர் ஜெனரால் ஆக நியமனமும்,

(ஈ) பிரிகேடியர் எல் எம் சமரவீர, ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ - முன்பேணுதல் பகுதி (கிழக்கு) அலுவல்களில் ஈடுபட்ட கட்டளைத் தலைவர் பதவியினைத் துறத்தலும் தரைப்படைத் தலைமையகத்தின் பிரதான பொறியியலாளராக நியமனம் செய்தலும்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒகத்து 20.

2-136

2007 இன் இல. 36

டீஆர்எப்/ஆர்ஈசீரீ/580 (iv) ஏவை.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தருடைய பதவியினை நிரந்தரமாக்குதல், மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

அ. கப்ரின் (தற்காலிக மேஜர்) பிட்டவல லியன லலித் த சொயிஸா விஜயரத்ன, ஆர்எஸ்பி, கரெ

(1) 2006, ஓகத்து மாதம் 14 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல்
(2) 2006, ஓகத்து மாதம் 14 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் லெப்டினன்ட் கர்னல் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 06.

2-138/1

---

2007 இன் இல. 37

இல. : டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2380.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல். இளைப்பாறுதல், இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, செத்தெம்பர் மாதம் 2 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61618 கப்ரின் (தற்காலிக மேஜர்) பிட்டுவல வித்தானகே நந்தசிரி , யூஎஸ்பீ இஇபொதுசேப

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, செத்தெம்பர் மாதம் 3 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/ 61618 மேஜர் பிட்டுவல வித்தானகே நந்தசிரி , யூஎஸ்பீ இஇபொதுசேப

**இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, செத்தெம்பர் மாதம் 3 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/ 61618 மேஜர் பிட்டுவல வித்தானகே நந்தசிரி , யூஎஸ்பீ இஇபொதுசேப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, யூலை 6.

2-27

---

2007 இன் இல. 38

இல. : டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2379

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/ 60925 கப்ரின் (தற்காலிக மேஜர்) விஜேபால அம்பேசிங்க முதியன்சேலாகே நயனானந்த விஜேபண்டார, மிநிரெ

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப்

படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/ 60925 மேஜர் விஜேபால அம்பேசிங்க முதியன்சேலாகே நயனானந்த விஜேபண்டார, மிநிரெ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 29.

2-62

---

2007 இன் இல. 39

இல. : டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/580 (V)ஏவை.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு, மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரினது பதவியுயர்த்துதல்/ மரணத்தின் பின்னரான பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) கப்ரின் (தற்காலிக மேஜர்) விஜேதுங்க ஆரச்சிகே சமிந்திர பூஜாலி விஜேதுங்க, ஆர்எஸ்பீ, கவீப

(1) 2006, ஒற்றோபர் மாதம் 6 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல்

(2) 2006, ஒற்றோபர் 06 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் லெப்டினன்ட் கர்னல் பதவிக்கு பதவியுயர்த்துதல்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, நவெம்பர் 20.

2-29

இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2378.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக தரைப்படை சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக தரைப்படை சேவையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

எ/ 61520 கப்ரின் மேனக ரசிக்க பிரசாத் ஹந்துகல , ஆர்டப்பீ ஆர்எஸ்பீ இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006,செத்தெம்பர் 29.

2-28

---

2007 இன் இல. 40

டீஆர்எப்/ஆர்ஈசீரீ/580 (iv) ஏவை.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மரணத்தின் பின்னர் பதவி உயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரினது மரணத்தின் பின்னர் பதவி உயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/64785 கப்ரின் ரன்படின் கெதர ஜயந்த குமாரரத்ன, மிநிரெ, 2006 ஓகத்து மாதம் 12 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு உயர்த்துதல்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 06.

2-138/3

2007 இன் இல. 41

இல. : டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/580 (vi)ஏவை.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மரணத்தின் பின்னர் பதவியுயர்த்துதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரினது மரணத்தின் பின்னரான பதவியுயர்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) உ/65269 கப்ரின் பஸ்நாயக்க முதியன்சேலாகே துஷார குமார வராபிட்டிய இசிறெ 2006, ஓகத்து மாதம் 23 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு உயர்த்துதல்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 29

2-63

---

2007 இன் இல. 42

டீஆர்எப்/ஆர்ஈசீரீ/580 (iv) ஏவை (1) பீ.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மரணத்தின் பின்னான பதவியுயர்வுகள்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்களினது மரணத்தின் பின்னான பதவியுயர்வுகள் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) உ/63052 கப்ரின் ஹிட்டிஹாமி முதியன்சேலாகே சாலிய தீப்தி விஜேநாயக்க, கவீப, 2006, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

(ஆ) உ/64478 கப்ரின் சம்பத் துஷார தந்திரிகே, இபஉப, 2006, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

(இ) உ/64675 கப்ரின் சமன் பிரியந்த பாடிப்பெரும, இபொ, 2006, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

(ஈ) உ/65310 கப்ரின் லியனோராகே பத்மால் பந்து குணவர்தன, மிநிறெ, 2006, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

(உ) உ/65327 கப்ரின் ஹேவா விரிதுகே சன்ன அநுரங்க, மிநிறெ, 2006, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து மரணத்தின் பின்னர் மேஜர் பதவிக்கு பதவியுயர்த்துதல்.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, நவெம்பர் 20.

2-138/4

---

2007 இன் இல. 43

இல. : டீஆர்எவ்21/ஆர்ஈசீரீ/2324.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61081லெப்டினன்ட் அதுல தேசப்பிரிய திரிமாவித்தான, இசைப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒற்றோபர் 9.

2-26

2007 இன் இல. 44

டீவீஎப்/ஆர்ஈசீரீ/9/ ஏஎக்ஸ் (1).

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதல் இளைப்பாற்றுவித்தல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, யூன் 25 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/2306 கப்ரின் (தற்காலிக மேஜர்) பஸ்நாயக்க முதியன்சேலாகே பிரேமலால் சுரேந்திர நாத் பண்டார பஸ்நாயக்க, இஇபொதுசேப

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006. யூன் 26 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படை தொண்டர் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/2306 மேஜர் பஸ்நாயக்க முதியன்சேலாகே பிரேமலால் சுரேந்திர நாத் பண்டார பஸ்நாயக்க, இஇபொதுசேப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, யூன் 22.

2-134/2

---

டீவீஎப்/ஆர்ஈசீரீ/9/ ஏவை (1).

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவணையிலிருந்து அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2005, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கை தரைப்படை தொண்டர் படையின் அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/3390 கப்ரின் பஸ்குவல் ஹந்தி சமன் சுசந்த த சில்வா, இஇசேப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

மேஜர் ஜெனரால் அசோக்க கே ஜயவர்தன,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. விஎஸ்வி, யூஎஸ்பி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2006, செத்தெம்பர் 08.

2-134/1

---

2007 இன் இல. 45

டீவீஎப்/ஆர்ஈசீரீ/262/ ஏவை (1).

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மே 20 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை தொண்டர் படையணியிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/6001 லெப்டினன்ட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) (பொதுக் கடமை) குறுப்பு ஆரச்சிகே தொன் பிரேமரத்ன, இசிரெ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஒகத்து 22 ஆந் திகதி.

2-137

மேவீஎப்/ஆர்ஈசீர்/260.

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவணையிலிருந்து அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006. சனவரி 15 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/5832 2/லெப்டினன்ட் மொரவக்கோரலகே இந்துநில் ஜானக்க பொன்சேக்கா, கரெ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006, ஓகத்து 22 ஆந் திகதி.

2-135

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"மதுரன்குளியவில் "மதுரன்குளிய சோ மில்" என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தனி உரிமையாளராகத் தொழில்கொண்டு நடாத்துகின்ற மதுரன்குளியவைச் சேர்ந்த மஹா ஹெட்டி ஆராச்சிகே துசித்த பிரியங்கர என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ரீ. எஸ். ஐ. வெத்தேவ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, பெப்புருவரி 10 ஆந் திகதிய 3330 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதில் தவணை தவறியுறள்ளார். ஆதலாலும் மேற்கூறப்பட்ட 3330 ஆம் இலகக ஈட்டுமுறியின் மீது 2006, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக எட்டு இலட்சத்து எழுபத்திநான்காயிரத்து நூற்றறுபத்திநான்கு ரூபா நாற்பது சதம் (ரூ. 8,74,164.40) கொண்ட தொகையும் 2006, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை எட்டு இலட்சம் ரூபா (ரூ. 8,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலை நாளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் சொல்லப்பட்ட மஹா ஹெட்டிகே ஆராச்சிகே துசித்த பிரியங்கர என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும் பின்னர் திருத்தப்பட்டவாறான, 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும், சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து, எட்டு இலட்சத்து எழுபத்திநான்காயிரத்து நூற்றறுபத்திநான்கு ரூபா நாற்பது சதம் (ரூ. 8,74,164.40) கொண்ட தொகையும் 2006, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை எட்டு இலட்சம் ரூபா (ரூ.

8,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் 1 ஆவது வேலை நாளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன் கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சத வீத (7%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக, 3330 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள்மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**06/ 2/ 10 ஆந் திகதிய 3330 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பற்று தெற்கிலுள்ள மதுரன்குளிய கிராமத்தில் அமைந்துள்ளதும், சன்டி சேனை மறுபெயர் மதுரன்குளிக் காட்டுத்தோட்டம் எனவழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணி பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது- வடக்கில் : பாதைக்கான ஒதுக்கிடம் ; கிழக்கில் : ஏ. டபிள்யூ. எம். நஸீம் என்பவருக்குச் சொந்தமான காணி ; தெற்கில் : பாதைக்கான ஒதுக்கிடம் ; மற்றும் மேற்கில் : அலோஷியஸ் என்பவருக்குச் சொந்தமான காணி ; பரப்பளவில் இது, அதன் மீதுள்ளவையும் அதனோடு இணைந்துள்ளவையுமான மரங்களுடனும், கட்டிடங்களுடனும், பயிர்களுடனும், மற்றெல்லாவற்றுடனும் இரண்டு றூட்களை (0ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளது.

அடுத்துப் பின்னரான ஒரு நில அளவையின்படி சொல்லப்பட்ட காணி பின்வருமாறு குறித்துரைக்கப்படுகின்றது :

மேற்கூறப்பட்ட மதுரன்குளிய கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளரான வீ. பாலசுப்பிரமணியம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.06.03 ஆந் திகதிய 264 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 01 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், சன்டி சேனை மறுபெயர் மதுரன்குளிக் காட்டுத்தோட்டம் எனவழைக்கப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 01 சொல்லப்பட்ட வரைபடத்தின்படி பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது- வடக்கில் : பாதை ; கிழக்கில் : முன்னர் டபிள்யூ. ஏ. எம். நஸீம் என்பவரினதும் ஏனையோரினதும் ஆதனமாகவிருந்த அகதி முகாம் ; தெற்கில் : பாதை ; மற்றும் மேற்கில் : எஸ். மேரி மேகலின் ஆதனம் ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட நில அளவையின்படி இரண்டு றூட்களை (0ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி. கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

1-75

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2006.01.19 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் கீழ் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"திரு. முன்னிபுரகே சஞ்சீவ உதய குமார, திரு. முன்னிபுரகே சோமசிரி என்பவர்களால் மக்கள் வங்கியின் சார்பில் குருநாகலில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு திருமதி அநுபமா முஹந்திரம் அவர்களால் 2000.06.30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 852 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மீது மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நாநூற்றி ஐம்பத்திரண்டு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 3,90,452.48) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நாநூற்றி ஐம்பத்திரண்டு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 3,90,452.48) அத்துடன் மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நாநூற்றி ஐம்பத்திரண்டு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 3,90,452.48) மீது 2005.09.30 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு தசம் ஐந்து (26.5%) சதவீதப்படி மேலும் வட்டியையும் ஏலவிற்பனைச் செலவையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் ஏதும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக குறிப்பிடப்பட்ட 852 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவும் குருநாகலையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் டபிள்யூ. எம். ஐ. கல்லேல்ல அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனம் / ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கடுகம்பல ஹத்பத்துவ, யடிகஹ தெற்கு கோரளை, பரிகொட என்ற கிராமத்தில் அமைந்துள்ள "கனன்கமுவ வத்தை" என்ற காணிக்கு நிலஅளவையாளர் நாயகம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட கடைசி கிராம நில வரைபடமான 964 ஆம் இலக்க வரைபடத்தின் 62 ஆம் இலக்க காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பி. ஏ. என். குனசிரி அவர்களால் 1999.10.15 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 934 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் காணிக்கான எல்லைகள் ; வடக்கு : குளியாபிடியவிலிருந்து குருநாகல் வரை செல்லும் பிரதான பாதை ; கிழக்கு : க.கி.ப. 964 ஆம் இலக்க வரைபடத்தின் 63 ஆம் இலக்கக் காணி ; தெற்கு : க.கி.ப. 964 ஆம் இலக்க வரைபடத்தின் 74 ஆம் இலக்கக் காணி ; மேற்கு : க.கி.ப. 964 ஆம் இலக்க வரைபடத்தின் 27ஏ ஆம் இலக்கக் காணி என்ற எல்லைக்குட்பட்ட ஒரு றூட், மூன்று பேர்ச்சஸ்

(0ஏ. 1றூ. 3பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகைக் கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக. (J46/95 - குளியாபிடிய)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச உதவி பொது முகாமையாளர்,
குருநாகல்/மாத்தளை.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 03, வத்ஹிமி பாதை,
குருநாகல்.

2-98

---

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் 21.11.2002 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கார்டியே வெலிகமகே அமித் பியால் டீ சில்வா, பொரள லியனகே நந்தாவதி அல்லது நந்தாவதி பொரள லியனகே இருவரும் மக்கள் வங்கியின் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. டீ. எம். பீரிஸ் அத்தாட்சிப்படுத்திய 03.05.2000 ஆந் திகதி கொண்ட 2967 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது மேற்படி 2967 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் மேற்படி பத்து இலட்சம் ரூபாவையும் (ரூ. 10,00,000) பத்து இலட்சம் ரூபா மீது (ரூ. 10,00,000) 09.03.2001 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு தசம் ஐந்து (26.5%) சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் வேறு விற்பனை அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 2967 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பி. ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பற்று கத்தலுவயில் அமைந்துள்ளதும் கெற்றகலகஹாவத்த என அழைக்கப்படுவதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக - வடக்கில் : மஹாவத்த ; கிழக்கில் : கெதரவத்த ; தெற்கில் : கத்தலுவ-தித்தகல பெருந்தெரு ; மேற்கில் : தெவனியாகஹாவத்த என்பன அமைந்துள்ளன. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. கார்வின் டீ சில்வா தயாரித்த 01.03.70 ஆந் திகதிகொண்ட 1295 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு இரண்டு றூட் இருபத்தாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 26.5பே.). இது காலி மாவட்டக் காணிப்பதிவகத்தில் டீ 566/56 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 22, டிக்சன் கீழ் வீதி,
காலி.

2-99

---

**மக்கள் வங்கி - ஹிங்குரன்கொட கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2001.08.29 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் கீழ் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"திரு. மீபே ஆசாரிகே தர்மசேன என்பவர் மக்கள் வங்கியைச் சார்ந்த அநுராதபுர பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். தீபது குமாரி என்பவர் அத்தாட்சிப்படுத்திய 29.04.1999 ஆந் திகதி கொண்ட 80 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது கொடுப்பனவில் தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரம் ரூபா (ரூ. 1,26,000) வருமதியாகவும் செலுத்த வேண்டியுள்ளது. ஆதலால் 29.06.1999 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை இப்பொழுது சொல்லப்பட்ட ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரம் ரூபா (ரூ. 1,26,000) உம், மற்றும் ஆண்டொன்றுக்கு 24 சதவீதப்படி ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரம் ரூபா (ரூ. 1,26,000) இற்கான வட்டியையும், விற்பனை செலவையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெற்றிருப்பின் அவற்றைக் கழித்து 80 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற

ஏலதாரர் சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதன வளவு பற்றிய விவரணம்**

வடமத்திய மாகாண, பொலனறுவை மாவட்ட மெதிரிகிரிய சிங்களபத்துவ பிரதேச வருமான அலுவலர் பிரிவு 68ஏ கிராம சேவையாளர் பிரிவு திவுலன்கடவெல என்ற இடத்தில் அமைந்துள்ள விஹாரகம என்ற கிராமத்தில் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ள திவுலன்கடவெல என்ற காணி நிலஅளவை நாயகம் என்பவரால் தயாரிக்கப்பட்ட எப். சி. பி. 124 என்ற வரைபட இலக்கத்தின்படி இலக்கம் 343 ஐ கொண்ட காணித்துண்டு 2ஏ. 0றூ. 18பே. விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 325 ; கிழக்கில் : காணித்துண்டு இலக்கம் 324, 344 ; தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 342 ; மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 283 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அதன்கண் அமைந்துள்ள பயிர்கள், மரங்கள், அனைத்துமாகும். இது பொலன்னறுவை காணி பதிவு அலுவலகத்தில் 4/3/27, என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
பொலன்னறுவை.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
இல. 325, பிரதேச செயலக கட்டிடத் தொகுதி,
புதிய நகரம்,
பொலன்னறுவை,
தொலைபேசி இல. : 027-23900, 027-23522, 027-24404.
மின் அஞ்சல் : pol@rho-people's bank.lk

2-101

---

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 214061 மற்றும் 214062- அஷ்ரா மோடர் டிரேடர்ஸ்

10.08.2006 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானம் ஆவது

"கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. எல். பி. பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 16.08.1991 ஆந் திகதிய 14496 ஆம் இலக்க மற்றும் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டி. இலங்கசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 20.08.1999 ஆந் திகதிய 2090 ஆம் இலக்க முறியின் மீது கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் என்ற பெயரில் கடப்பாடுடையவராக அஷ்ரா மோடர் டிரேடர்ஸ் எனும் பெயரின் கீழ் வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் தம்பி லெப்பை முஹம்மது அன்சார் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். (கீழ் கூறப்படும் 1 ஆவது ஆதனத்தின் அட்டவணை)

கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. எல். பி. பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 16.08.1991 ஆந் திகதிய 14495 ஆம் இலக்க மற்றும் 11.05.1990 ஆந் திகதிய இலக்கம் 14679 மற்றும் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டி. இலங்கசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 20.11.1995 ஆந் திகதிய 1466 ஆம் இலக்க கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு கடப்பாடுடையவராக அஷ்ரா மோட்டர் டிரேடர்ஸ் எனும் பெயரின் கீழ் வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் தம்பி லெப்பை முஹம்மது அன்சார் வருமதியான கொடுப்பனவில் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு தவணை தவறியுள்ளார். (கீழ் கூறப்படும் ஆதனத்தின் இரண்டாவது அட்டவணை)

கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. எல். பி. பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 17.05.1994 ஆந் திகதிய 15188 இலக்கமும் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டி. இலங்கசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 20.11.1995 ஆந் திகதிய 1465 ஆம் இலக்கமும் கண்டி பிரித்த நொத்தாரிசு ஜே. எல். பி. பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 16.02.1995 ஆந் திகதிய 16035 ஆம் இலக்கமும் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டி. இலங்கசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 20.08.1999 ஆந் திகதிய 2091 ஆம் இலக்கத்தின் கீழ் கடப்பாடுடையவராக அஷ்ரா மோட்டர் டிரேடர்ஸ் எனும் பெயரின் கீழ் வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் தம்பி லெப்பை முஹம்மது அன்சார் வருமதியான கொடுப்பனவில் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு தவணை தவறியுள்ளார். (கீழ் கூறப்படும் ஆதனத்தின் 3 ஆவது அட்டவணை)

மேற்படி முறியின் மீது 4.7.2006 ஆந் திகதியன்று உள்ளவாறு இரண்டு கோடி பதின்நான்கு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்றி பன்னிரண்டு ரூபா ஏழு சதம் (ரூ. 2,14,04,812.07) வருமதியாக உள்ளதாலும் இரண்டு கோடி பதின்நான்கு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்றி பன்னிரண்டு ரூபா ஏழு சதம் (ரூ. 2,14,04,812.07) பணத்தொகையும் அத்துடன் 5.7.2006 ஆந் திகதி வரை வட்டியாக ரூ. 1,89,30,800 இற்கு 20% வருடாந்த வட்டியும் விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக 14496, 2090, 14495, 14679, 1466, 15188, 1465, 16035 மற்றும் 2091 இலக்க முறிகளின் பிரகாரம் கொமர்ஷல் பேங்க் ஒப் லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்டவையுமான இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும் கண்டி வட்டப்புமுவ இலக்கம் 83/5 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜ. டபிள்யூ. ஜயசூரிய, என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாவது அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கண்டி மாநகர சபை எல்லைக்குள் யட்டிநுவர கங்கவட கோரளை கட்டுகளையில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டி. பி. சோமதாச என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4.8.1977 ஆந் திகதிய 1018 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்டு வரிக்கட்டணம் இலக்கம் 113/16 இல் அமைந்துள்ள வீடு மற்றும் வளவும் இதன் எல்லைகள் - வடக்கிற்கும், பாதுகாப்புக்கென, கிழக்குக்கும், வரிக்கட்டண இலக்கம் 113/17 இல் அமைந்துள்ள வளவு மேற்கிற்கும், பாதுகாப்புக்கென மேற்குக்கும் இந்த எல்லைக்குள் அமைந்துள்ள இதன் பரப்பளவு பேர்ச்சஸ் 4.75 (0ஏ. 0றூ. 4.75பே.) விசாலமான இடமும் மற்றும் ஏனையவைகளும் இது கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் வெறும/பத்திருவ ஏ171/84 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குள் யட்டிநுவர கங்கவட்ட கோரளே தற்போது சிரிமாவோ பண்டாரநாயக மாவத்தை இதற்கு முன் பேராதெனிய பாதையில் அமைந்துள்ள வரிக்கட்டணம் இலக்கம் 76, மற்றும் 78A யிலிருந்து H வரை மற்றும் இலக்கம் 74 வளவுகளின் மிகுதி பகுதியின் தற்பொழுது வரிப்பணம் இலக்கம் 115/2 வளவுக்கு கண்டி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். சி. ஒ. த.லா.மொட் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5.10.1973 ஆந் திகதிய 4637 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்டு லொட் 5 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு தென்கிழக்கிற்கு : தனியாருக்கு சொந்தமான பாதை ; தென்மேற்கிற்கு : எம். எஸ். ஏ. பாசாவுக்கு சொந்தமான பேராதெனிய பாதை வரிப்பணம் 119/1 இல் ; வடமேற்கிற்கு : பாய்வா என்பவருக்கு சொந்தமான பேராதெனிய பாதை வரிப்பணம் 115, 117 உம் ; வடகிழக்கிற்கு : மேற்கூறப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் லொட் 5பி இல் அமைந்துள்ள பகுதி மற்றும் அங்கே அமைந்துள்ள அனைத்து மேற்கூறப்பட்ட வரைபடத்தில் சொன்ன பிரகாரம் பாதை மற்றும் அதிலுள்ள அனைத்துமே உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

இது கண்டி காணி பதிவு செய்யும் அலுவலகத்தில் வெரும/பத்திருவ A 157-113 இல் பதிவு செய்ப்பட்டுள்ளது.

### மூன்றாவது அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர எல்லைக்குள் யட்டிநுவர கங்கவட்ட கோரளே அஸ்கிரிய பாதை அமைந்த கண்டி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். சி. த.லா.மொட் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 25.01.1974 ஆந் திகதிய 4696 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் (மஞ்சல் நில அடையாளமிடப்பட்டது. பாதுகாப்புக்கு விடப்பட்டு) பிரித்தெடுக்கப்பட்டு லொட் 1 என அடையாளமிடப்பட்ட எல்லைகள் வடக்கிற்கு : லொட் 02 பண்டா ; கிழக்கிற்கு : காப்புறுதிக்காக (மஞ்சல் நிற அடையாளமிடப்பட்ட துண்டு) மற்றும் புகையிரத திணைக்களத்திற்கான ஒதுக்கு ; தெற்கிற்கு : அஸ்கிரிய பாதை மற்றும் ; மேற்கிற்கு : வரிப்பணம் இலக்கம் 06 என இங்கு எல்லையில் அமைந்துள்ள அஸ்கிரிய பாதை வரிப்பணம் இலக்கம் 02, மற்றும் 04 இல் வீடு உட்பட மற்றும் சகலதுமாக இடத்தின் பரப்பளவு பேர்ச்சஸ் 23.2 (0ஏ. 0றூ. 23.2பே.) விசாலமான இடம் (புகையிரத திணைக்கள பாதுகாப்புக்கு விடப்பட்டதாக)

இது கண்டி காணி பதிவகத்தில் A231/236 பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வரைபட இலக்கம் 4696 இல் லொட் 2 இல் மேற்கூறிய அஸ்கிரிய பாதையில் அமைந்துள்ள இடத்திற்கு எல்லைகள் வடக்கிற்கும் : கமல்தீன் என்பவருக்கு இன்னுமொரு வரைபடத்தின் பிரகாரம் இலக்கம் 1228 இல் கூறப்படும் லொட் 03 இல் மிகுதித் துண்டு பிரித்து வேலியுடனான ; கிழக்கிற்கு : பாதுகாப்புக்கு ; தெற்கிற்கு : லொட் 1 என ; மேற்கிற்கு : லொட் 2 A உம் என இங்கு எல்லைகள் அமைந்துள்ள சகலதுமாக பேர்ச்சஸ் 6.3 (0ஏ. 0றூ. 6.3பே.) விசால இடம் அதிலுள்ள அனைத்தும்.

இது கண்டி பதிவு செய்யும் அலுவலகத்தில் A226/231 பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளையின்படி,

திருமதி ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

2-132/2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 02.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.01.2007 |
| | | வெள்ளி | 09.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.01.2007 |
| | | வியாழன் | 15.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.02.2007 |
| | | வெள்ளி | 23.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.02.2007 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 02.03.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.02.2007 |
| | | வெள்ளி | 09.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.02.2007 |
| | | வெள்ளி | 16.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2007 |
| | | வெள்ளி | 23.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2007 |
| | | வெள்ளி | 30.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2007 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 05.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.03.2007 |
| | | வியாழன் | 12.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.03.2007 |
| | | வெள்ளி | 20.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.04.2007 |
| | | வெள்ளி | 27.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.04.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.